இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு அவர்களைப் பார்த்து, “மானிடமகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்” என்றார் (யோவான் 12:20-23)

# இறைமக்கள் சந்தைகளை அல்ல இல்லங்களை உருவாக்க வேண்டும்!

## திருத்தந்தையின் தவக்கால வேண்டுகோள்

தவக்காலப் பயணத்தில் நமக்குள்ளும் நம்மைச் சுற்றிலும் சந்தைகளை அல்ல மாறாக இல்லங்களை உருவாக்க இறைவேண்டல்கள் செய்வோம் என்றும், கஞ்சத்தனம், மற்றும் அவநம்பிக்கைக் கொண்ட சந்தைகளைப் போலல்லாமல் நம்பிக்கையுள்ளவர்களாக, தொய்வின்றி இறைவேண்டலில் இறைத்தந்தையின் கதவை நாம் தட்டவேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வணிகர்களை ஆலயத்திலிருந்து விரட்டி அடித்து, என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள் என்று கூறிய கடுமையான இயேசுவின் செய்தியை மனதில் நிறுத்தி, இறைவனுக்கு முன் நம்மை இருவேறு நிலைகளில் நிலைநிறுத்தும், இல்லம் - சந்தை என்னும் இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டில் கவனம் செலுத்துவோம் என்றும் கூறினார் திருத்தந்தை.

**சந்தை – இல்லம்**

ஆலயம் என்பது ஓர் இறைவனின் உறைவிடமாக இருப்பதால் அது கடவுளை சந்திக்கச் செல்லும் இடம், அவருடன் ஒன்றித்து இருப்பதற்கான இடம், நமது மகிழ்ச்சி மற்றும் துன்பங்களை அவருடன் பகிர்ந்து கொள்வதற்கான இடம் என்றும் கூறினார் திருத்தந்தை. சந்தை என்பது அவ்வாறில்லை. அங்கே, உண்மைக்கும் நேர்மைக்கும் இடமிருக்காது. சந்தையில் பொருள்களின் விலையோடு செய்யப்படும் வியாபார உக்திகள், பேரம் பேசுதல் போன்றவை இருக்கும், ஆனால், இல்லத்தில் அதனை நாம் காணமுடியாது. சந்தையில் தனது சொந்த விருப்பங்களை மக்கள் நாடுவர். இல்லம் என்பதில் அவ்வாறில்லை. என்றும் வரையறுத்தார் திருத்தந்தை.



**இயேசு ஏற்க மறுப்பவை**

இயேசு கடவுளின் ஆலயம் இல்லமாக மாறுவதை விடுத்து சந்தையாக மாறுவதை ஏற்கவில்லை என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, கடவுளுக்கும் மனிதனுக்கும், சகோதரர்கள் ஒருவர் மற்றவருக்கும் இடையில் நிலவும் ஒன்றிப்பை, இரக்கத்தை, மன்னிப்பை கடவுளின் நெருக்கத்தை நம்மில் கொண்டு வரும் மையங்களாக இல்லங்கள் உள்ளன என்றும் திருத்தந்தை கூறினார்.

**மனித உடன்பிறந்த உணர்வைப் பகிர உதவும் செபம்**

இந்த தவக்காலத்தில் இறைவேண்டல் வழியாக, மனித உடன்பிறந்த உணர்வைப் பரப்புங்கள் அது அதிகமாகத் தேவை என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துயரமான, தனிமைப்படுத்தப்பட்ட மக்களைப் பற்றி நினைத்துப் பார்ப்போம் என்றும் வலியுறுத்தினார் தருத்தந்தை.

நம்மிலும் நம்மைச்சுற்றிலும் இல்லங்களை அமைக்க அன்னை மரியாள் உதவுவாராக என்று கூறி கூடியிருந்த திருப்பயணி களுக்குத் தன் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தொடர்ந்து, கடவுள் நமக்கு என்ன கொடுக்கிறார் என்ற கேள்விக்கு, நம் வாழ்வில் அனைத்துமே அவரால் கொடுக்கப்பட்டதே என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் என தன் செய்தியில் கூறியுள்ள திருத்தந்தை, கடவுள் எப்போது, எவ்வாறு தன் மக்களுக்கு தன்னைத் தருகிறார் என்பது குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும் என்ற அழைப்பையும் விடுத்துள்ளார். நமது இல்லம் அவரது உறைவிடமாக மாற வேண்டும். அவரது திருவுளம் நிறைவேறும் தளமாக இல்லங்கள் மாற்றம் காண வேண்டும் என்றார். இல்லங்களே இறைவனில் தலைசிறந்த உறைவிடம். இங்கே வணிகத் தன்மையும் பேரம்பேசுதலும் இருந்தல் ஆகாது என்று திருத்தந்தை அழைப்புவிடுக்கறார்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

## ‘பழைய இலைகள் உதிரட்டும் புதிய துளிர்கள் தோன்றட்டும்’ செந்தூல், புனித யோசேப்பு பங்கில் தியானம் நடைபெற்றது

செந்தூல்: இங்குள்ள புனித யோசேப்பு ஆலயத்தில் தமிழ் பேசும் பங்கு மக்களுக்கான தவக்காலத் தியானம், தமிழ் திருத்தூதுப் பணிக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த 2/3/2024 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை தியானம் உருவாக்கப் பயிற்சி அறையில் நடைபெற்றது.

“ பழைய இலைகள் உதிரட்டும் புதிய துளிர்கள் தோன்றட்டும்” என்ற கருப்பொருளுக் கொண்டு, இந்த தியானத்தை காஜாங், திருக்குடும்ப ஆலயத்தைச் சேர்ந்த சகோதரர் ஆர்.கே சாமி அவர்கள் மதிய உணவு வரையிலான முதற்பகுதியை வழிநடத்தினார். தொடக்கத்தில் புனித அகஸ்தினாரின் முற்கால பாவ வாழ்வையொட்டி தியானிக்க இறைமக்கள் அழைக்கப்பட்டார்கள். அவரது மனமாற்றத்திற்கு காரணமாக இருந்த அவரது தாயார் புனித மொனிக்காவின் பதினாறு ஆண்டுகால வேண்டுதல் மற்றும் புனித அம்புரோஸ் அவர்களின் வழிகாட்டல் ஆகியவற்றின் ஊடாக பாவ வாழ்வ முற்றாக விட்டுவிலகி இயேசுவின் வழியில் தன் வாழ்வை வாழத்தொடங்கின புனித அகுஸ்தினார், இத்தியானத்தின் வெற்றிக்கு உதவினார் என்றே கூற வேண்டும்.




இறைமக்க்ள் இத்தவக் காலப் பயணத்தில் இயேசுவை நமது வாழ்விற்குள் பெற மரம் தன் பழைய இலைகளை உதிர்வது போல நாமும் நமது பாவப்பழக்கங்களைக் களைந்து புதிய நற்குணங்களைப் பெற்று புதிய வாழ்வை வாழ வேண்டுமெனத் தொடர்ந்து சகோதரர் ஆர்.கே அவர்கள் ஊக்கமளித்தார். இரண்டாம் பகுதியை அருள்தந்தை ஜோர்ஜ் ஹரிசன் அவர்கள் இறைவாக்கினர் எசாயா “இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” என்ற விவிலிய வார்த்தையை முன்னிறுத்தி நாம் அனைவரும் நற்செய்தியை அறிவிப்பதற்கு அழைக்கப்பட்டவர்கள் என்பதை விரிவாக கூறி திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும் கடவுளின் பணியாளர்கள் என்பதையும் அவரது பணியைச் செய்ய உரிமையுடையவர்கள் என்பதையும் எடுத்துக்காட்டினார்.

தொடர்ந்து திருமுழுக்கின் அர்த்தத்தையும் நமக்கு ஞானப்பெற்றோர் இருப்பதற்கான காரணம் மற்றும் நாம் பெற்றோர் வழியாக பிறந்தாலும் திருமுழுக்கின் வழியாக பாவத்திலிருந்து விடுபட்டு கடவுளின் பிள்ளைகளாக பிறக்கின்றோம் என்பதன் முக்கியத்துவத்தையும் இத் தவக்காலத்தில் பெரிய காரியங்களை செய்வதல்ல மாறாக சிறிய செயல்களை அன்புடன் செய்வதன் வழியாக ஏற்புடைய வாழ்வை வாழலாம் என்பதையும் சுட்டிக்காட்டி இறுதி ஆசீருடன் தியானத்தை முடித்து வைத்தார்.

*-திருமதி குளோரியா மேரி*

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் பொதுநிலையினர் இறையியல் தொடர் பயிற்சி தொடங்கியது

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மறைக்கல்வி ஆணையத் தின் ஏற்பாட்டில் கத்தோலிக்க இறை யியலையொட்டிய தொடர் பயிற்சி யொன்று அண்மையில் தொடங்கப்பட்டது. அருட்சகோதரி ரீத்தா அவர்களின் பார்வையில் நடைபெற்று வரும் இந்த உருவாக்கப் பயிற்சியில் மறைமாவட்டத் தின் பங்குகளில் இருந்து மறைக்கல்வி ஆசிரியர்கள் பலர் பங்கேற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் முதல் வகுப்பு கடந்த பிப்ரவரி 17 அன்று, கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் பங்கேற்ற இருவரின் கருத்துப் பரிமாற்றம் பின்வருமாறு:

### சங்கீதா ஆர்.கே.சாமி

இறையியல் வகுப்பில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்த இறையியல் வகுப்பில் பங்கேற்க எனது பங்கான திருக்குடும்பப் பங்கில் இருந்து ஒன்பது மறைக்கல்வி ஆசிரியர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டனர். அதில் நானும் ஒருவர். இறைப்பணியில் ஊக்கமுடன் ஈடுபட வேண்டும் எனது கனவு.

இதற்கு எனது பாட்டியும் (அம்மாச்சி) எனது பெற்றோர்களும் காரணமாவர். இவர்களின் நீண்ட கால இறப்பணி எனக்கு உறுதுணை இருந் தது.



ஓரளவு முழு மையான விவி லிய அறிவும் இறையியல் பற் றிய தெளிவும் இல்லாததால் நான் தயங்கிய துண்டு.


எனவே, இன்று தொடங்கப்பட்ட இந்த இறையியல் தொடர் உருவாக்கப்பயிற்சி எனக்கு உறுதுணையாக இருக்கும் என்று பெரிதும் நம்புகிறேன்.

முதல் நாள், மீட்பின் வரலாறு என்ற தலைப்பில் வகுப்பு சிறப்பாக ஆரம்ப மானது. அடுத்து வரும் 10 மாதங்களுக்கு நான் இந்த வகுப்பில் தவறாமல் கலந்து பயன்பெறுவேன் என்ற நம்பிக்கை என்னில் உள்ளது.

### ஜெனி∴பர் நிக்சன்

நான் கெப்போங், டேசா ஜெயா கிறிஸ்து ஒளி பங்கைச் சேர்ந்தவர்.

இத்தவக் காலத்தில் என் நம்பிக்கை வாழ்வை இன்னும் ஆழப்படுத்த இந்த இறையியல் உருவாக்கப்பயிற்சியில் கலந்து கொண்டுள்ளேன். இது முற்றிலும் ஆண் டவரின் அழைப்பு என்றே நம்புகிறேன்.



இப்பயிற்சியின் வழி எதிர்காலத்தில நான் இன்னும் தேர்வுப்பெற்ற மறைக்கல்வி ஆசிரியராகத் திகழ முடியும் என்று நம்புகிறேன். குறிப் பாக, முதியோருக் கான கிறிஸ்தவ புகுமுக சடங்கு முறை வகுப்புக்கு நான் ஒரு சிறந்த ஆசிரியராக என் னைத் தயாரிக்க முடியும். முதல் பயிற்சியான மீட் பின் வரலாற்றை அருட்சகோதரி ரீத்தா அவரகள் சிறப்பாக வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கடவுள் நமக்கு என்ன கொடுக்கிறார?



என்ற கேள்விக்கு, நம் வாழ்வில் அனைத் துமே அவரால் கொடுக்கப்பட்டதே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என தன் செய்தியில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், கடவுள் எப்போது, எவ்வாறு தன் மக்களுக்கு தன்னைத் தருகிறார் என்பது குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும் என்கிறார்.

# "விதைத்தவரும் விதையும்" - மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான உருவாக்க பயிற்சி

மறைக்கல்வி: கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மேய்ப்புப்பணி மையம் புதிய மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி ஒன்றை, கடந்த வாரம் மார்ச் மாதம் 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் நடத்தியது. திருஅவையிலும், தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்விலும் மிக முக்கியமான பங்கு வகிப்பவர்கள் மறைக்கலவி ஆசிரியர்கள். ஒரு மறைக்கல்வி ஆசிரியர், கத்தோலிக்க திருஅவையின் படிப்பினைபடி கடவுளின் செய்தியை மற்றவர்களுக்கு முறையாக வழங்குவதற்காக கடவுளால் ஆறு பிரிவுகளில் பகிர்ந்து கொள்ளப் பட்டது. இதில் முக்கிய கருத்தாக மறைக்கல்வி பாடத்திட்டமும் மற்றும் "மலேசிய மறைக்கல்வி நூல்வரிசை" தொடரின் பயன்பாட்டு முறையும் பகிரப்பட்டது. தொடரின் ஒவ்வொரு தலைப்பிலும் மூன்று கூறுகள் உள்ளன. இதில் முதலாவதாக வாழ்க்கை அனுபவம், இரண்டாவதாக இறைவார்த்தை பகிர்வு மற்றும் விசுவாச மறுமொழி என்னும் வழிமுறையில் பாடங்கள் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கபடுகின்றது.




அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார்.

இப்பயிற்சி இங்கு டாக்டர் ஸ்டீவன் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் **46** மறைக்கல்வி ஆசிரியர் கள் பல பங்குகளிலிருந்து கலந்து கொண்டார்கள். இப்பயிற்சி "விதைத்த வரும் விதையும்" என்னும் தலைப்பில் நடைபெற்றது. இந்த உருவாக்க பயிற்சி இதன் வழியாக மறைக்கல்வி மாணவர் களுக்கு முறையான ஒரு பாடதிட்டதை அமைத்து போதிப்பதற்கும் மற்றும் இறைநம்பிக்கையை ஆழப்படுத்தவும் மறைக்கல்வி ஆசிரியர்களுக்குப் பேருதவி யாக இருக்கும் என்று பங்கேற்பாளர்களால் கருத்துரைக்கப்பட்டது.

*கிறிஸ்டினா கேப்ரியல் - புனித அந்தோனி யார் ஆலயம், கோலாலம்பூர்.*

## உலகின் மொத்த நாடுகளுள் மூன்றில் ஒன்றில் மத உரிமை மீறல்கள்

ஐ.நா.வின் மனித உரிமைகள் அவையின் 55வது கூட்டத் தொடரில் திருப்பீடத்தின் சார்பில் உரையாற்றிய பேராயர் பலெஸ்த் ரேரோ அவர்கள், கருத்து சுதந்திரம், மனச்சான்றின் சுதந்திரம், மத சுதந்திரம் போன்றவை உட்பட மனிதனின் உரிமைகள் மீறப்பட்டுவருகின்றன என்ற கவலையை வெளியிட்டு, மத நம்பிக்கை யுடையோர் பாகுபாட்டுடன் நடத்தப் படுதலும், சித்ரவதைப்படுத்தப்படலும் உலகம் முழுவதும் பெரிய அளவில் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

# பாவத்தில் மடிந்தால் நிலைவாழ்வு

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு வழிபாட்டில் பயணிக்கும் நமக்கு இறைவன் நம்பிக்கை ஊற்றாகிய நிலைவாழ்வை உரிமையாக்கும் வழியைப் பற்றி சிந்திக்க அழைக்கிறார்.

இலையுதிர் காலம் வந்தபோது மரத்தில் பூத்துக் குலுங்கிய பூக்களும் அதன் இலைகளும் உதிர்ந்து போனது. அவ்வழியாக வந்த ஒரு வழிபோக்கன் "ஐயோ! இப்படி மொட்டையாக காட்சியளிக்கிறதே,' என்று பரிதாபமாக அம்மரத்தைப் பார்த்துச் சொன்னான். அந்த மரம் " மனிதா! இது இழப்பு அல்ல. மாறாக புது வசந்தத்திற்கு ஒரு தயாரிப்பு. இன்னும் சில மாதங்கள் கழித்து வா. புதிய இலை, புதிய பூ என்று நீ காணாத அழகைக் காண்பாய்.' என்றது.

ஆம், கோதுமை மணி மண்ணிலே விழுந்து மடிந்தால்தான் அது மீண்டும் துளிரவிட்டு செடியாகும். பல மடங்கு அறுவடைக்குப் பயன்படும். அவ்வாறே கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு இறந்து உயிர்பெற்று அனைவருக்கும் புது வாழ்வு அளிப்பது ஒரு வசந்த காலமே. இதுதான் இயேசுவின் மெசியா தன்மை.

இந்தத் தவக்காலத்தில் நாமும் நம் பாவங்களுக்காக இறந்தால்தான் புதிய வாழ்வுக்கு உயிர்தெழுவோம். தம்மை இழந்து நிலையான வாழ்வை உரிமையாக்கிக் கொள்பவர்கள் மண்ணில் மடிந்து பல மடங்கு பலன் தரும் கோதுமை மணிக்கு ஒப்பானவர்கள். உலகில் நாம் எதையும் கொண்டு வந்ததில்லை உலகை விட்டு பிரியும் போது எதையும் கொண்டு போவதும் இல்லை.

இன்றைய நற்செய்தியில் எருசலேமிற்குத் திருவிழாவுக்கு வந்த சில கிரேக்கர்கள் இயேசுவைக் காண விரும்பினர். பெரும்பாலான யூதர்கள் இயேசுவின் மீது நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். ஆனால், புறவினத்தார் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்துவிட்டனர். இச்சூழ்நிலையில்தான் சில கிரேக்கர்கள் பிலிப்புவிடம் வந்து " ஐயா! இயேசுவைக் காண விரும்புகிறோம்." என தங்களின் விருப்பத்தைத் தெரிவித்தனர். அந்திரே யாவும் பிலிப்பும் இயேசுவிடம் சென்று அதைத் தெரிவித்தனர். அப்போது இயேசு, " மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது." என்கிறார். எவ்வாறு கிரேக்கர்கள் இயேசுவைக் காண விரும்பி பிலிப்பிடம் வந்தார்களோ, அது போல



நாமும் இயேசுவை விரும்பிக் காண செல்ல வேண்டும். இயேசுவில்தான் நமக்கு வாழ்வு. நாம் இயேசுவைக் கண்டு வாழ்ந்து கொண்டு இருந்தாலும் பிறரையும் இயேசுவிடம் அழைத்துச்செல்பவர்களாக வாழ வேண்டும். பிலிப்பு தன்னை நோக்கி வந்த கிரேக்கர்கள், முன் பின் அறிமுகமில்லாதவர்களாக இருந்த போதி லும் அவர்களின் ஆசையை நிறை வேற்றுகின்றார். இடர்பாடுகள் வந்தாலும் ஆண்டவர் நம்மை விட்டு விலக மாட்டார் நம்மை மாட்சிபடுத்துவார் என நம்பிக்கையுடன் வாழ்வோம்.

*சவரிநாதன், சுங்கை பட்டாணி, கெடா*

**தவக்காலம் 5-ஆம் ஞயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எரே 31: 31 – 34 |
| திரு.பாடல் | 137: 1-2. 3. 4-5. 6 |
| 2-ம் வாசகம் | எபி 5: 7 – 9 |
| நற்செய்தி | யோவா 12: 20 – 23 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**